மனிதனைத் தேற்றும்படி -
அவனிடம் அன்பு காட்டும்படி
தேவன் அவனுக்கு ஒரு
மனைவியைக் கொடுக்கிறார், ஒரு
நல்ல மனைவியை பெற்றிருக்கிற
எந்த மனிதனும் அதை
அறிந்திருக்கிறான். ஒரு நல்ல
மனைவியைக் குறித்து
ஏதோவொன்று உண்டு...



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: அவர் உங்களை விசாரிக்கிறவர், மார்ச் 1, 1960, போனிக்ஸ், அரிசோனா, அமெரிக்கா

**24.** கர்த்தருக்குச் சித்தமானால், இன்றிரவு 1 பேதுருவின் புஸ்தகத்திலிருந்து என்னுடைய பாடத்தை எடுக்க விரும்புகிறேன். நீங்கள் என்னுடன் வாசிக்க விரும்பினால், 1 பேதுரு 5–ம் அதிகாரம், 5–ம் வசனத்திலிருந்து தொடங்கலாம்: 1 பேதுரு 5:5 முதல்.

**அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத் தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்,**

**தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.**

**ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.**

**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.**

**25.** என்னவொரு அருமையான வேதவாசிப்பு! இப்பொழுது, "**அவர் உங்களை விசாரிக்கிறவர்**" என்பதன் பேரில் ஒரு பாடத்திற்காக இதை எடுக்க விரும்பினேன்.

**26.** மேலும் அது பரி. யோவான் **14–**ம் அதிகாரத்திலும் எழுதப்பட்டுள்ளது.

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என் னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.

**54.** நாம் மற்ற பரிகாரங்களுக்கு திரும்பும் போது அதை தான் நாம் செய்கிறோம். அங்கே அநேக பரிகாரங்கள் உள்ளன, ஆனால் நிவாரணம் (Cure) ஒன்று மாத்திரமே உள்ளது. கிறிஸ்துவே நிவாரணமாயிருக்கிறார், இதில் மாத்திரமே நிவாரணம் உள்ளது. **அவர் நமக்காக கவலைப்படுகிறார். அவர் நம்மை நேசிக்கிறார், நாம் அவரிடம் வரும்படி அவர் விரும்புகிறார்.** அவ்விதமாகத்தான் தேவன் நம்மை உண்டாக்கியிருக்கிறார், தேறுதல் அடையும்படி வாஞ்சிக்கும்படியான பரிசுத்த காரியங்கள் நம்மில் உள்ளன.

**55.** மனிதனைத் தேற்றும்படி – அவனிடம் அன்பு காட்டும்படி தேவன் அவனுக்கு ஒரு மனைவியைக் கொடுக்கிறார், ஒரு நல்ல மனைவியை பெற்றிருக்கிற எந்த மனிதனும் அதை அறிந்திருக்கிறான். ஒரு நல்ல மனைவியைக் குறித்து ஏதோவொன்று உண்டு... ஒரு மனிதன் தன்னுடைய

வியாபாரத்தில் அல்லது – அல்லது தன்னுடைய ஜீவியப் பாதையில் ஏற்பட்ட எதிர்பாராத முடிவால் வருத்தத்தோடு வீட்டிற்கு வரக்கூடும்; யாருமேயில்லையென்றோ, எந்த மருத்துவரும் இல்லையென்றோ கவலையில்லை...

**56.** அவ்விதமாகத்தான் எனக்கும் இருக்கிறது. நான் வெளிநாடுகளிலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்தாவது வரும் போது, நான் மிகவும் பதட்டமுள்ளவனாகவும், நிலைகுலைந்து போனவனாகவும், தூக்கத்தை இழந்தவனாகவும் வரும்போது. பசியாயுள்ள சிறு பிள்ளைகள் தெருவில் அழுவதை நான் கேட்கிறேன், அவர்களை நான் பார்க்கிறேன், ஓ, அழுது கொண்டு செல்கிறார்கள், அது அப்படியே என்னைக் கொன்று விடுகிறது. பிறகு நான் வீட்டிற்கு வரும்போது, என்னுடைய மனைவி இருக்கையின் கை பக்கத்தில் உட்கார்ந்து, தன்னுடைய கரத்தை என்னைச் சுற்றிலும் போட்டுக் கொண்டு, "ஓ,

பில், நான் – நான் அதை புரிந்து கொள்கிறேன், உங்களுக்குத் தெரியும்” என்று கூறுவாள்.

**57.** மனைவியிடமிருந்து வரும் சில தட்டிக் கொடுக்கும் சிறு காரியங்கள் அதிகமாக அர்த்தமுள்ளதாகும்; ஒரு கணவனுக்கும் மனைவியிடம் அதே காரியம் இருக்கிறது. அந்த விதமாகத்தான் அது இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாம் அதற்குப் பதிலாக ஏதோவொன்றை பதிலீடாகப் பெறும் போது, அந்த ஸ்தானத்தை எடுக்கும்படி முயற்சிக்க வேறு ஏதோவொரு ஸ்திரீயை நீங்கள் பெற்றுக் கொள்ளும் போது, அல்லது மற்ற ஏதோவொரு மனிதனை பெற்றுக்கொள்ளும் போது, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப் பாருங்கள்.

**58.** இப்பொழுது, ஏன், அவர் நமக்கு நண்பர்களைத் தருகிறார். அவன் நேசிக்கிறான்... நாம் – நாம் நண்பர்களைக் கொண்டிருக்க வேண்டும். நமக்கு

சகோதரர்கள் இருக்க வேண்டும். ஆபத்துக் காலத்தில் ஒரு நல்ல சிநேகிதனிடம் போய், "ஓ, என்னுடைய நண்பனே, குறிப்பிட்ட – குறிப்பிட்ட காரியம் சம்பவித்து விட்டது" என்று சொல்வதென்பது எவ்வளவு நன்றாக இருக்கும். ஒரு நல்ல, நம்பிக்கைக்கு பாத்திரமான நண்பன் உட்கார்ந்து உங்களிடம் பேசுவான், அது அற்புதமானது. அது தேவனுடையதாக உள்ளது. உங்கள் மனைவி அப்படியே தேவனுடையவளாக இருப்பது போலவும், உங்களுடைய கணவன் தேவனுடையவனாக இருப்பது போலவும். நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கும் போது.

**59.** ஆனால் மனிதன் கூட தன்னுடைய விழுந்து போன சுபாவத்தைக் காண்பிக்க, அப்படிப்பட்டவைகளை அவனில் பெற்றிருக்கிறான், தேவன் அவனுக்குக் கொடுத்ததை அவன் சீரழிக்கிறான். முதலாவது காரியமாக, அவனுக்கு தேறுதலைக் கொடுப்பதற்காக பரிசுத்த

ஆவிக்குப் பதிலாக அவன் (மது) புட்டியை அல்லது உலகத்தை எடுத்துக் கொள்கிறான். அவனுடைய ஜீவியத்தின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளும்படிக்கு தேவன் அவனுக்கு ஒரு மனைவியைக் கொடுக்கிறார், அவன் அவளுடன் திருப்தியடையாமல், மற்றொரு மற்றொருவளை அவன் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது; அது போலவே ஸ்திரீயும் வேறொருவனை பெற்றுக் கொள்கிறாள்; வாலிப ஜனங்களும் மற்றவர்களும் அவ்விதமே செய்கின்றனர்.

**60.** கர்த்தர் நமக்கு அருளியிருக்கிற இந்த எல்லா தேற்றரவாளர்களும் இருந்தும் கூட, பிரயாணத்தின் முடிவை அது அடையும் போது, காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நம்முடைய புருவத்தின் மீது ஒரு தலையணையை நாம் அழுத்தினவர்களாய், மரித்துக் கொண்டிருப்போம், நம்முடைய மனைவியானவள் தன்னுடைய முகத்தில் கண்ணீர் வடித்தவளாய், தேவனை நோக்கி அவளுடைய கண்களை உயர்த்தினவளாய்

நின்று கொண்டிருக்க மாத்திரமே செய்ய முடியும். நம்முடைய நண்பனோ நம் தோளில் தட்டிக் கொடுத்தவனாய், நம்முடைய கரங்களைக் குலுக்கினவனாய், தன்னுடைய கைகளை பிசைந்து கொண்டு நின்று கொண்டிருக்கக் கூடும், ஏனெனில் அதற்கு மேல் அவனால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் அச்சமயத்தில் அந்த தேற்றரவாளன் இருப்பாரானால், தாவீது சொன்னது போல, "ஆம், நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன். நீர் என்னோடு கூட இருக்கிறீர். மரண இருளின் பள்ளத்தாக்கிலும் கூட உமது கோலும் உம் தடியும் என்னைத் தேற்றும்" (என்று கூற இயலும்).

**61.** மனிதன் ஏன் தாகமுள்ளவனாயும் பசியுள்ளவனாயும் இருக்கிறான்? ஏனெனில் அவன் உண்டாக்கப்பட்ட போது, அவனைத் தேற்றரவு பண்ணும்படிக்கு தேவன் வாசம் பண்ணும்படியாக அவனுக்குள் ஒரு சிறு இடம் சிருஷ்டிக்கப்பட்டு, அவன்

உண்டாக்கப்பட்டிருக்கிறான். அவன் பாவத்தின் காரணமாக தன்னைத்தான் உதறிக் கொண்டு, தேவனை விட்டு அப்பால் செல்லும் போது, அந்த இடம் வெற்றிடமாக இருக்கிறது. அதன் காரணமாகத்தான் அவன் அதற்காக – அதை அடைவதற்காக பசியாயிருக்கிறான்.

**62.** இன்று கிறிஸ்தவர்களாகிய நம்மிடமுள்ள பிரச்சனை என்னவெனில், நம்முடைய விழுந்து போன சகோதரனிடமுள்ள காரியம் என்னவென்று அவனிடம் காட்டுவதற்கு நம்மால் செய்யக் கூடிய எல்லாவற்றையும் நாம் செய்யாமல் இருக்கிறோமா என்று நான் அஞ்சுகிறேன். அவனோடுள்ள காரியம் அதுதான். வாலிப பருவத்தினரிடையேயுள்ள குற்றங்களுக்கான காரணம் அது தான், அதன் காரணமாகத்தான் சபையில் குற்றங்கள் நடக்கின்றன, வீடுகளில் குற்றங்கள் நடக்கின்றன, அதுதான் இளம்பருவத்தினரை குற்றம்புரிய வைக்கிறது.

**63.** அதன் காரணமாகத்தான் நடத்தை கெட்டவர்களும் (beatniks) மற்றவர்களும் தெருவில் மேலும் கீழுமாக குதித்துக் கொண்டு, இந்த எல்லா காரியங்களையும் அதிகரிக்கச் செய்கின்றனர், ஏனெனில் அவர்களைத் திருப்திபடுத்துவதற்காக ஏதோவொன்றை கண்டு கொள்ள அவர்கள் முயற்சிக்கின்றனர்.

**64.** கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் இன்றிரவு நான் இதைச் சொல்லட்டும்: பரிசுத்த ஆவியின் வல்லமை வருவது போன்று திருப்திபடுத்துவது எதுவுமில்லை. அது உங்களுடைய ஜீவியத்தையும் உங்களுடைய மனப்பான்மையையும் மாற்றி, உங்களுக்குத் தேற்றரவையும், நித்திய ஜீவனையும் கொடுக்கும்.

*இம்மானுவேலின் இரத்தத்தினால் நிறைந்த ஊற்று ஒன்றுண்டு*

*அங்கு பாவிகள் அந்த இரத்த வெள்ளத்தில் மூழ்கும் போது*

*தங்கள் எல்லா பாவக் கறைகளையும் போக்கிக் கொள்கின்றனர்*

**65.** ஒரு மனைவியானவள் தேற்றி முதுகில் தட்டிக் கொடுக்கலாம். ஒரு நண்பன் உட்கார்ந்து நல்ல ஆலோசனைகளை வழங்கலாம். ஆனால் பாவத்தை நீக்குவதற்கான ஒரே காரியம் மாத்திரமே உண்டு, அதுதான் கர்த்தராகிய இயேசுவின் இரத்தமாகும்.

*என்னுடைய பாவத்தை எதனால் நீக்கக் கூடும்?*

*இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை;*

*என்னை மீண்டும் சுகப்படுத்த எதனால் கூடும்?*

*இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை.*

எழுத்தாளர் கூறுவது போல:

*ஓ, விலையேறப்பெற்ற நதி*

அது பனியைப் போன்று என்னை வெண்மையாக்கும்;

வேறே நதியை அறியேன்,

இயேசுவின் இரத்தம் தானே.

★★★★★